// பதிவஞ்சல் ஒப்புகையுடன் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை–6.
பிறப்பிப்பவர்: முனைவர் த.இராஜேந்திரன்

ந.க.எண். 77734/ஜே/இ2/2022 நாள் 29.02.2024.

******

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் நியமனம் – திருப்பூர் மாவட்டம், சேசையன்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி – தொழிற்கல்வி ஆசிரியர் திரு.பி.தர்மராஜ் – 26.04.2002ல் இறப்பு – வாரிசுதாரரான மகன் திரு.த.செந்தில்குமார் என்பவருக்கு மாற்று விண்ணப்பத்தின் மூலம் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்திட அனுமதி அளித்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது – பணியில் சேர்ந்த நாளான 13.02.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து – உத்தரவிடுதல் – சார்ந்து..

பார்வை:
1. அரசாணை (1டி) எண்.12, பள்ளிக் கல்வி [பக3(1)]த் துறை, நாள் 09.01.2019.
2. திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.7178/அ1/2018, நாள் 11.02.2019.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள் 26.02.2021.
4. திருப்பூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் ந.க.எண்.6215/அ1/2022, நாள் 09.12.2022, 24.07.2023 மற்றும் 12.10.2023.
5. இவ்வியக்கக இதே எண்ணிட்ட ந.க.எண். நாள் 27.05.2023 மற்றும் 14.11.2023.

********

ஆணை:–

திருப்பூர் மாவட்டம், சேசையன்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி ஆசிரியராகப் பணிபுரிந்தபோது பணிக்காலத்தில் 26.04.2002–ல் காலமான திரு.பி.தர்மராஜ் என்பவரின் வாரிசுதாரரான மகன் திரு.த.செந்தில்குமார் என்பவருக்கு பார்வை 2–ல் கண்டவாறு மாற்று விண்ணப்பம் மூலம் பணிநியமனம் வழங்கிட தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள் ) சட்டம் 2016–ன் பிரிவு 20(6) (b)–ஐ தளர்வு செய்து உரிய அலுவலர் அளவில், கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்க அனுமதி அளித்து 09.01.2019–ல் அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் கண்டவாறு அரசால் வழங்கப்பட்ட அனுமதி ஆணையின்படி, பார்வை 3-ல் காணும் செயல்முறைகளில் குண்டடம் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிநியமனம் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்த நாளான 13.02.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் அன்னாருக்கு பணிவரன்முறை செய்திட கோரி பார்வை 6-ல் கண்டவாறு திருப்பூர் முதன்மைக் கல்வி அலுவலரால் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பெறப்பட்ட கருத்துருவினை பரிசீலனை செய்ததில், பார்வை 4-ல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத நிலையில் கீழ்கண்ட விவரப்படி பணிவரன்முறை செய்து இச்செயல்முறைகள் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி திரு. | முதன் முதலில் பணியில் சேர்ந்த பள்ளி / அலுவலக முகவரி | இளநிலை உதவியாளர் பதவியில் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | த.செந்தில்குமார் இளநிலை உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், குண்டடம். | 13.02.2019 முற்பகல் | 13.02.2019 முற்பகல் |

நிபந்தனைகள்:

1. தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 32எ(1)-ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவத்தினை முடிக்கப்பட வேண்டும்.

2. தகுதிகாண்பருவ காலத்தில் இரண்டாண்டுகளுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சி பெற வேண்டும்.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்து வழங்கப்பட்ட ஆணை குறித்து உரிய பதிவுகள் சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

பெறுநர்:
1. மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்,
   திருப்பூர்.
2. திரு.த.செந்தில்குமார்,
   இளநிலை உதவியாளர்
   வட்டாரக் கல்வி அலுவலகம்,
   குண்டடம் (உரிய அலுவலர் வழியாக)